T. 7214

# அமானுல்லா கதை

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
ச. ராஜேஸ்வரி

நெறியாளர்
முனைவர் வீ. அரசு
பேராசிரியர் – தலைவர்
தமிழ் இலக்கியத்துறை

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2011

T. 7214

# அமானுல்லா கதை

*"சுவடியியலும் பதிப்பியலும்"*

*பட்டயப்பேற்றிற்காகச்*

*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*

*அளிக்கப்பெறும் பதிப்பேடு*


பதிப்பாளர்

**ச. ராஜேஸ்வரி**

நெறியாளர்

முனைவர் **வீ. அரசு**

பேராசிரியர் – தலைவர்

தமிழ் இலக்கியத்துறை



**தமிழ் இலக்கியத்துறை**

**சென்னைப் பல்கலைக்கழகம்**

சென்னை - 600 005.

2011

“சுவடியியலும் பதிப்பியலும்” பட்டயச் சான்றிதழுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு.

எண் : 43011059

**முனைவர் வீ. அரசு**
பேராசிரியர் & துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **“சுவடியியலும் பதிப்பியலும்”** பட்டயச் சான்றிதழுக்காக **“அமானுல்லா கதை”** எனும் தலைப்பிலான சுவடியை **ச. ராஜேஸ்வரி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும், இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

**(வீ. அரசு)**

நாள் : – – 2011
இடம் : சென்னை – 5.

**ச. ராஜேஸ்வரி**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

# பதிப்பாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் "**சுவடியியலும் பதிப்பியலும்**" எனும் பட்டயச் சான்றிதழுக்காக "**அமானுல்லா கதை**" ஆனது என்னுடைய சொந்த முயற்சியில் பதிப்பிக்கப்பட்டது என்று சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்,

**(ச. ராஜேஸ்வரி)**

நாள் : – – 2011.

இடம் : **சென்னை–5.**

என் பாசமிகு தாய் தந்தையர்
சகோதரர்க்கு. . .

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 13 |
| நன்றியுரை | 15 |
| அமானுல்லா கதை | 17 |

## பதிப்புரை

இந்நூல் முகம்மதியர் மதத்தை சார்ந்ததாய் "உலுக்குமலுக்கும் படைவெட்டு" என்ற பெயர் உடையது. இதனை இயற்றியவர் பெயர் முதலியன ஒன்றும் தெரியவில்லை. அமானுல்லா கதையில் இடம் பெற்ற பாத்திரங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. இந்த கதையில் முகம்மதனிரசூலாக அறிமுகமாகும் இப்பாத்திரம் இந்த கதைக்கு வலிமை சேர்க்கிறது.

## நன்றியுரை

"சுவடியியலும் பதிப்பியலும்" என்கிற பட்டயப் படிப்பில் சேர்வதற்கு வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பட்டயப் படிப்பில் செம்மையான முறையில் பயிற்சியளித்த பேராசிரியர் வீ. அரசு மற்றும் முதுநிலை விரிவுரையாளர்கள் ய. மணிகண்டன், முனைவர் லதா, முனைவர் சி. இளங்கோ அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நெறியாளர் என்கின்ற முறையில் இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பிப்பதற்கு என்னை ஊக்கப்படுத்திய பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு மிக்க நன்றி.

# அமானுல்லா கதை

## உலுக்கு மலுக்குப் படைவெட்டு

மன்னு முலுக்கு மலுக்குப்படை வெட்டையான
பன்னு தமிழறிந்து பாடவே- உன்னுமுயிர்
ஆரண நூற்கெட்டாத வாதியிறையோனான்
காரணமாங் கர்த்தாவே காப்பு
அமானுல்லா கிருபை செய்யவும்.

யாகூபாகிய முகமதுநபி . . .
தளியல்பெறு நூறாயிரத்தி இருபத்தி
இரண்டாயிரம் வளைகளை அதினுயிர்
முன்னூற் றொருபத்து முன்னீரும்
முழுங்கியவலம் செங்கம் முதுநிலைய
தன்னுதன் சலசலங்கள் மூவிரண்டினுக்கு
. . . . . . . விதினிலம்பனில மக்கமாங்
கடலில் விளங்கிய தினெல்லாம். 1

. . . . . . . மரமாம் நூறாயிரத்தி
இருபத்தி இரண்டாயிரம் மதிலே
மரமுன்னூற் றொருபத்து முன்னுவளா
தகுடுமதினிலும் இகம் கொட்டுமா
விண்ணுக்கும் இகமூறாண்டு குரித்த
தெமாங்கனிய திவெ கட்டு
மரமா மொன்றேத் தமாய்யுயர
மக்காவிலே தினெல்லாம் விளையும். 2

அவையிருந்த வறக்கமெல்ல புரம்தோழமை
ஆகிய யானைகள் நால்வரும்
பினிதிருப்ப பந்தமரம்நாற்பத் தோறாயிரத்
தின்அரும் படைத்தலைவர் சூழ்ந்திருப்பர்.
இதையே புகழ்வானவர்கள் வந்திறங்கி
சேசே என்றுயினிது செவிப்பகற
ஓதுவித்தன்குரு முகம்ம தனிரசூல்
கானக சிங்காசனத்தில் இருந்தார். 3

வாரணத்திரள் களினிது சூழ்ந்திருப்ப
வலம்புரி நடுவில் இருப்பன்
போலகிற நீர்துளியின் திரள்கள்
சூழ்ந்திருப்ப செழும்மதி நடுவில்
இருப்பன் போன்ற காரணத்தாலும்
நபியார்களும், நாலுயானைகளும் இனிது
சூழ்ந்திருப்ப காருண்ய கடலானமுகம்ம
தனிரசூல் கானகசிங்காசனத்தில் இருந்தார். 4

நவதமெ தரித்துநின்ற இறைஞ்சி
மேகமென அவுலிகையாக திகழ்ந்த
ஆதாம் தொடுத்த நபிகளெல்லாம்
வரயரணைச் சனங்களும் கரசெந்
நீதியை தரித்தவர் குலரஞ்சனை
முகத்தில் நிறைந்திட உணராதுகஸ்
தூரிகாமென மணக்கும் முகம்மதனிரசூல்
கானக சிங்காசனத்தில் இருந்தார். 5

அக்க நாயகன்தன் அருகற
நம்மிற சூலாழியா சனத்திலிருப்ப
மக்க மான்கரிசர்பிகள் தனிலோர்
வரம் பரித்தலைவர் மனசுர
மிக்க வெண்சுரத்தாலுனது பாலரியா
மெலிதல் என்றவர் துணையுரனார்
செக்க வானமதியின்முகம் புலரிந்தழுது
திருநபி அருகில் வந்துறைப்பார். 6

அந்தமாமாநபியே ஆதிதன் தூத
அருகரே அகமதே போற்றி
கொந்துமாமாநபியே முடித்தபா பிறந்த
குறசிவங் கிஷத்தரெ போற்றி
சந்தமாமாநபியே நபிகள் நாயகமே
நன்மையின் தன்னுவே போற்றி, 7

சதுமறைப் பொருளேயித்தன் உள்ளவு
மதமியறை இனிது செய்தெம்
அதிகமுத்து கந்திர நிங்களெல்லாக்
கடியவற காரபினி துண்டோ
விதுமுரத்தர சேசே மெயத்துணை
வாடுவது படியினால் இளமைபோல்
அல்லவாயிதை பகைத்துருகி அனலிடும்
மெழுகாய் ஆனதுசிறிதல்ல பெரிதே . 8

அன்னமும் மறுக்காரடுக்க செர்மியார்
அறுந்த மாதவரினும் முத்தரியார்
தன்னுள்ளம் கறைந்தான் தாவெழியேன்
தானாற் நிறுத்த நிண்டழகண்
டென்னயன் புடையார் நபிகள்நாயகத்
துக்கியம் புமென்ற அனுப்பினதனால்
நின்னிடம் பகறந் துனிந்தவன்
பிணியை நீக்குமென்று உரைத்தனர். 9

சனூரயருள் என்றதால் இறைபோன
விடும் பிணிதுயரை இறைவனே
தவிரப்பா ரென்றே முன்பவென்றிசெர்
மேகம் குடையிட புகழதெவின்றவரும்
தேடியளிப்ப நனலிசர்சதுபத்து பையா. .
நாலு யானைகளும் புடைவளைய
மன்றல்செர நபிமன்சூறுவெண் சுரத்தால்
வருந்த நெரறனெ கூடவந்தார். 10

சிவந்தசெம் முகத்தான வரவுகண்டுளமே
தெளிவுபெற்ற கந்து முகம்மதனிரசூல்
பாதங் கயத்தைக் கரத்தினால்
பிடித்து பரிவுடன் மகிழசலாம்
உறைத்து ஆதரவுடனே சிங்காசனத்தில்
அவதரித் தமையும் அன்புகலந்த
நிதமனம் புடையதலைவர் மன்சூறும்
தேடிய வனருகரோடு உரைப்பார். 11

அலியெதரித்த தேரடையாய நபியே
அரசின்மேல் கபுகொடு மெதிக்குர
வெளியனை மக்கா யுகத்து
நிரவன் நானென்ன பாக்கியங்கள்
செய்தேனோ ஒளியை பெத்தவரேயுமது
வாக்கினை கண்பொறுரி நின்படிபோலே
பளிதமுக குடயிடெரி னெனும்
பாதமே தெளிந்தேன் பகர்ந்தார். 12

நிகரில்லான் உம்மை வளப்பன்
மன்சூரே நெருப்பெனும் சுரமணியே
நீகோபித்தாயோ எனினும் நபிகள்
நாயகமே முகமன் கவிகையின்
குருவேயுகமை பாதவ. . . . ப்னியகன்றன்
போல்உம்மை நான்கண்டு நோய்தவிழ்ந்
தேன்தகமைசேர குருவே வெட்டமரம்
புனலின்றவனமே தணிந்திலை என்றார். 13

பொதுசொபுயம் மன்சூறு தானுறைப்ப
ஆனாலு இந்தவனமே தனியசிதமா
தனையும் கனியும் முந்திரிகை
செழும் கனிதானுமே உணராதுசேர
மலரிப்பும் காவெல்லாம் காக்கும்
தசியத்து கலவியாருடனே பொதினூர்
நபியான முகம்மதனிரசூல் உறைத்தபின்
உள்ளோர் உரைப் பார். 14

பூவின்நாயகமே திங்கள்நாளள்வா இபுராய்க்கு
நம்பதியெல்லாம் சூழ்ந்த கரமெல்லாம்
நிறைய தெனப்பழுத் திருந்தகனிகளும்
காய்களும் காணேன் மெவுதீன்
புகழ்ந்ததும் பொறக்கு மயலூர்விலைப்
பழங்கொடுனி தங்கம் கொடுதென
தாவுபெறதிடையிர் ஆயிருந்த வருமக்கு
சொல்லவே பயந்தினி இருந்தேன். 15

. . . . தியநங்கா வெல்லாம் தினமும்
தழைத்திடா தழைப்பவரிவரோ பூதமோ
பரியோ சினைகளோ சிறையார்
புடைத்திடு பறவையின் குலமோ
ஓதுமொழியா தோவறிசிலோர் நடக்கும்
இயலடி குறைப்பையும் காணேன்
இதுமன்று உரைத்திடுவார்க்கு நாப்பலன்
எப்படி கொடுப்பதென்று உரைத்தார். 16

கரவுள்ளோர் உரைப்ப நபிகள்
நாயகமும் கருத்துள்ளே . . . .
வானபரி மன்சூறு மெய்ப்பணியும்
தவனமுந் தநிந்தினி தெழுந்து
பூவிலும் குருவா மெனவே
புகழமறை பள்ளியுத் தணுகி
எவலோடி ருந்தார் குடதிசையில்
. . . . சூரியனு முத்தடைந்தார். 17

பாலகனுடன் மதியெழுந் திலகுபதும்
ததுமிதுகை பரவஅகலு மெனகாண
வல்லநியோ போமென கத்திவலிந்திட
கதவடைப் பவிகலிருமகனவன் கனவு
கண்டிடவேண் டெழில் மறைக்கு
வளைகள் நகைப்ப மிகவறம்
கொடுமத்தெழுந்த எனக் கதிரோன்
வெட்கமுத்து மெல்லாம் வெளுத்தான். 18

. . . . ணிருத்தி வைப்பா ரசூல்
கருத்துடன் . . . . . . . .
முகமதை விடைதா வெனக்
கொண்டி லங்கும் மாமனையில்
. . . . இருந்தமுகமது சொற்ற
தொழிலுடன். . . . . . . .
எங்களால் மோதாமலி வனோடு
உரைப்பார்கோ விறைவிட்டி. . . . 19

. . . . . . . நபியார் நமதுகா
வனத்தை அகந்து ணிந்து
அழிப்பவனே . . . . . . . . வோ இவை
யார் மின்ன தண்ட
ரிதியோ மென. . . . ணைப் பிடித்து
சயமொடு குணரு மென்
இறையோன் நூதன. . . . . . . . .
துறங்கை யங்கர்வில் லேவிடுத்தார். 20

வள்ளல் சொற் கேட்டு. . . . . . .
. . . . . . . . வல்லா யுதங்கள்
வானணிந்து துள்ளுவெம் பரிகளேறி
யங்கம். . . . . . . .
சூழ்ந்து கொண்டிருப்ப வள்ளரும்
திரிபோல் வளரும் காட்டு முகிலென
கருத்துகள் மாயோரு கினபம்
பபை. . . வருவதைக் கண்டார். 21

பரிசைபோல விழியும் மடைகள்போல
மூக்கும் பனைக்காயும் பருத்தவளெயிரும்
பெரியசாலவயிறும் கருஞ்சிறுத்தை போலநகமும்
பெருக்கவே பருத்த காலினையும்
விரியும்மான் விழிபோலகண்ணே மதிமுகமாய்
விண்ணுமண்ணு திரளவே முழங்கி
கரிசமாயுருகின காலிலே புகுந்து
கண்டநாடுக ளெல்லாம் வளைத்தார். 22

குருக்கு மேனியின் சின்னிருபோ
தினையும் செங்கையால் வளைந்துறபிடித்து
நெருக்கலுமே மாண்டின மிய்யார்
நெடுமுடி உமருமர் தியனூர்
தருக்க நின்றோரு சின்கிடியென
முழங்க கள்ளசாவிகளை விட்டவனாற்
வெருக்கொள் . . . . டி கின்றமற
பொருந்தார் வினைப்பலிய மருமர்தியனூர். 23

உளந்தொடு கயதரெ சினத்தினால்
வலியால் உதைத்ததினால் ஒருவர்க்கொருவர்
தளர்த்திடார் மெலியார் சோர்ந்திடாமை
பார்தடக்கையும் துணைகளும் சலியார்
வளர்ந்தபொன் மலையும் கரியவெம்மலையும்
வனம்பொடு சேர்ந்து நின்றன்போல
வளர்ந்தயாறு மறுமாதியும் கின்னு
மிடைவிடா கலிமறப் பொருந்தார். 24

இந்தவரிகலும் வருமாறு நதினூர்
இறையவன் அளவிலே இறந்து
வந்துநாடி யதால்லிவர் முகமதனியார்
கதியேவென ரொருவர் வந்தணுகி
அந்தமாஞ் சின்ன விழத்தகுயேபிலன்
கொண்ட மறுமாதியறை மெறப்படுத்தி
விந்தைமா முகத்தார்நபிமுன் கொண்டுபோய்
விடுமென்று ரைத்தயல விரைந்தார். 25

அன்னத்தால்வந்தின் மறுமாதியும் பெரும்
படைத் தலைவன் னூத்துவரும்
கின்னையே சிலைநான் கயத்தினால்
பிணைந்து நின்னாமிது வென்கருவி
மன்னர்கென்று காமுன்கொடு விடுப்ப
முகம்மது நபியல்லா நோக்கியின்
அன்னோ நமுதுகாவெல்லாம் அழித்தான்
எங்கு ளானிவனேன் உரைத்தார். 26

ஆதியன் புடையீர் வனம்பதியவன்
பிறவினையே கேளுமென் றவாறு
பாதிநின்று றைப்பநபி யல்லாவோஇவ்
வாறறியவே . . . ளியோ. . . னனோ
வெதுநின் றார்கனூரி யார்
எமதுகா அழித்தவர் எல்லாம்
மோது மெண்டளவே கருமலையுடம்
பின்னுயர்ந்த சினபடியடி உரைக்கும். 27

வேறு-

தானாறும் புயவேந்தே மலையொரு
மறபெருக மனம் தவித்தேன்
அந்தநதி னூர்பெரும் பசியும்
இளைப்பையும் மென்த வனமும்நிற
நிறப்பிறசில வாறாயும் பொருளெனது
பதிப்பெறு மெனையாளும் அரசன்
பெரும்தொறா தபுசபலமும் எனபெறும்
படிப்படியே சொல்வேன் என்றான். 28

பெருந்தவத்து நபிரசூல் மாளிகையில்
தமத்திரு பெறனுறக் கொண்டிருந்த
சிறுக்கமராய மொன்றுடனே நலுமகிழ
நதிரசூல் நலாபொருந்து நூறுக்கல்
அரிசியும் யென்பது ஆடும்
பொசித்தெ ஒத்தம் மருந்து
மெனக்கிது தகுமோ வென
உரைப்ப நபிரசூல் அருள்வானே. 29

குத்தம்மனையாய் னெயிறச் சிதுனுனம்
பாலுமது பெரும்பசியை நாயணன்
கத்துவன்நீர் பருகும்என்ன விசுமில்
சொல்லியளிக்கும் பசரின்னருந்தும் பொது
மிகுந்தவனமும் இளைப்பும் தீராதபெரும்
பசியும் மெலிவுதிந்து அகத்திலு
துத்தமை யெனன மகிழ்ந்து
களிகூர்ந்து தெளிந்த குலமானானே. 30

தரும்பிரிவின் சித்தன்றவர் தனியாத
பெரும் பசியும் துறக்க
பெரும்யான் உறைக்க கேளுமென்ன
பெரி யோன் என்பார்
துரும்பையும் தூணாக்க வல்லான்
கேளுமின்ன சினம்பகிந்து சொல்லுவனே. 31

எலமழைத்தடக்கை முகம்மது சொற்கு
நானி மரைக்காயன் வாழ்வு
போல தழைத்திரு பூங்காவனமும்
மருகுநடும் தோரணமும் தடஞ்சுழன்றும்
செழித்த மணிமாளிகையும் சுரவனமும்
கடைத் தெருவும் ஒருவனை
பழித்திரு யதகுபுனை மகாபுரட்சியு
மென்னு பதிசூழ் நாடே. 32

அன்னாடு புரந்தரும் மலுக்குமுலுக்
கென்றுமெங்கள் அரசன் காஷ்சி
முன்னூறு முழபெருமன் அடங்காத
மலைபோலும் முடியின் நீளம்
பொன்னூறு மவன்யெடுக்கும் வடிவாள்
என்பதுபாரம் பூதல மீதில்
பன்னாளும் எடுத்திடும் தண்டாயுத
மென்றால் நூறுபாரம் தானே. 33

இட்டுமனை சிலில்நூறு பாரமதிர்
பூட்டியநாணி ருக்கி பின்
பூட்டமுடியா தோருகவர கவன்போலும்
உலகம் எல்லாம்பிறப் பாரில்லை
தட்டுமுறு நெடும் பூதத்தலைவர்
பத்துலகும் கொடி ஆடல்வினா
காட்டுப்பரியின் திரளு மெட்டுலகும்
கொடிபடை காணும் தானே. 34

எதிராடல் பொருந்திடும் சினயென்
போலும் படைஏழுலகும் கோடி
யதிசூற சங்கியர்கள் என்பதுலகும்
ஓடிஆடல் விருது திபாயும்
பதிவுறா உருமிநெடும் படை
யனந்தம் கோடி யோரில்
மதியாத்து றக்கியரும் நாலுலகும்
கோடிபடை மன்னர் தானே. 35

பண்பயலும் குயிலும்மொழியின் னுருவமறை
தானுருவாய் படைபோர் வெல்லும்
பெண்படையும் சதகோடிமைத் தெல்லாம்
மென்னரிதேன் பெருமான் கீர்த்தி
தண்பயிலும் புனல்நகு புலியொடு
புலவாயு மொருத்தன் மிதேனோ
பயிலும்உலக மெல்லாம் ஒருகுடையின்
தன்னாண்மை செலுத்தும் கோவே. 36

அன்னிலை பராசரமுறை முறைவத்தினி
யதிறை யளக்க விருச்
சின்னமுழங்கிட விருது காட்டியஞ்
செவிக்க நிறைசேசே யென்ன
இன்னிலத்தில் வேந்தன்முடியொரு முடியிற
ஒருமுடிபட்டொரு நாளைக்கு கோடி
பொன்னுதிர் இந்திரன்போல் ஒருகுடைக்
கீழ்யுலகமெல்லாம் பறக்கும் கோவே. 37

தேனென்றும் மொழிபவர்இருமருங்கிலே
இருப்ப தோடும் போற்ற
கானகமும் குழல்மர்தள நாடகங்கள்
டிப்பநெடு கவாரி வீச
பூனென்றும் வெள்ளபடைகள் நெருங்கிட
சிங்காசனத்தில் உலகம் எல்லாம்
தானே என்றிருப்ப தெல்லாம்யுன்னை
அறியா எனையாளும் தலைவன்தானே. 38

அவனுழையில் இருந்த எழுவர்நாங்கள்
ஒருநாள் புறப்பட்டளவு நாட்டை
கவனமுடன் பார்க்கவேண்டே வந்துநின்
பூங்கா வனத்தைக் கண்டேயானும்
அவன்பரிகளும் இதற்கு சரியான
வேண்டதிற் புகுந்து அயர்மாறி
கவன்மறந் தேன்கனி காய்பறித்
தருளதிய கண்டனமென தலத்தின்மீதே. 39

நின்னடிதெனது பூங்கா வில்கனி
யருந்தி நாலு மாதம்
அன்னாளிவிண் ணாள்முழுவதும் நின்று
மீராமல்வந்து கனியருந்திப் போவேன்
இன்னாள் நின்படைத் தலைவர்எனை
வளைத்துபிடித்து வந்துன் இடத்தேவிட்டார்
தன்னாண்மை பெருகிடும் அங்கோன்யிடத்
தில்போக விடைதருவாய் என்றார். 40

சின்னுரைக்க நபியுரைப்பார் சொன்ன
தெல்லாம்நல்லது நின்தினி மார்க்கம்
தன்னிலவாதுணி குவைநின் தனக்கினையர்
தெமது பெரும் தரும்மார்க்கம்
பொன்னகருக்கும் வழிகாட் டும்மனத்
திலுள்ள கருவறைக்கும் பொருந்தா
என்னதுன்னு தேடுகரத்தை அடித்துவிரல்
மூக்கில் வைத்துச் சொல்லுவானே. 41

தாளாண்மை உடையபிரான் படைப்பெருமை
வீரமெல்லாம் தானே கேட்டுக்
கேளாதவதைப் போலதின் குலத்தில்வருவை
யென்கி ளரத்தல் ஆமோ
ஆளாண்மை பெருகுமை தேன்வந்தன்
இதைக்கனவிலும் கத்தறி வானாகில்
வாளாண்மை கொடுபிளப்பான் இருவருக்கும்
குடியிருப்பு வானந் தானே. 42

இளந்தலை நிறமுடியன் கண்டேநின்
படைசோலை யெல்லாம் எங்கொன்
றுளந்தயவு கொண்டிருக்கும் படைத்
தலைவர் ஆனவரில் ஒருவன்எப்போதும்
தளந்திடவெங் கொமரனை படைப்
பொருந்தி விருதடக்கதகு மானாக்கால்
வளந்தருள நின்பொருந்த தினில்வரத்
துணிவேனல் லதுநான் வருந்திடனே. 43

என்றுசொன் னவன்மொழி கோட்டுரைப்ப
தெல்லாம் உரைத்திடு நீஎன்ன
சொன்னாலும் என்றுமுன்னை ஒன்றும்
செய்வதில்லை அடைந்தாரைக் காற்ப. . .
தாமாதிவென் றியேன்களிப் பன்எங்கள்அலி
புலியாள்வினை களெல்லாம் வெல்லவே
எதிரில்நன்றி உடன்வரு வையெனநபி
உரைக்க சினாம்கிழிந்து நவிலும்தானே. 44

குருகுநெடும் கடல்பெருகும் படைத்தலைவர்
சூழ்ந்திடும் யெக்கா மான்தன்னை
பொருந்திடவே நெண்டின்கின்று
குருசொன்ன நன்மொழிய போதும்
போதும்
வருந்தவத்தின் முறைகேளாய் காரணத்தின்
மார்க்கவழி வருவேன் என்டே
கருதிமனம் பொருந்திநபி முன்னுரைக்க
பின்னுகந்து கலிமா சொன்னாள். 45

பேரரசை உடனுக்கந்து சின்தனக்கு
கயிதென்வே பெருஞ் சாற்றி
வீரராள் சண்டைரசூலி தனிப்பாவிதம்
பூரித்த தொருதரின் கீர்த்தி
பெருமையெல்லாம் அரசன் முன்னே
சொல்வேன் கண்டிர் ஆனாலும்
பொருந்துவ னாய்ஒருவரை என்னு
டன்கூட்டி அனுப்பினென் என்றான். 46

மனமகிழ்ந்து நபிரசூல் உறைப்பார்
செய்வதே கிடக்குமன்பா வேகிகள்
மிகுந்ததினை மறவாது கலிமா
வசனம்காந் திடாதே வினை
மிகுந்தே அரசனுடன்நமது குலபெருமை
யெல்லாம் விளம்பா னென்டெதன்
மிகுந்தகுடை யானேவென்று வருவதுகேள்
உனக்கு தருவேன் என்றான். 47

இலங்கு நபிநாயகமே உமதுபொட்
டால்குறை களெனயொ ன்றில்லை
துலங்குமுடி யரசன்முன் னேயும்பெரு
மையாய்மகிழ்ந்து சொல் வேன்என்றோ
கலங்கவென் னைமுனியா. . . . யுமதுடன்வா
வரிசையி னார்கற்பித் தோன்ன
தலங்கருதும் குடைசாயிதே வெற்றியெல்லாம்
முமக்கிறை யோன்தருவான் என்றார். 48

இவையுரைத்து தமக்கருகில் இருக்கும்மறை
வேதியனார் இபுராகிமை உவமையுடன்
விழித்துறைப் பார்யரசு முலுக்கிநிடத்தில்
இருவருடனே ஒந்தும் மவிலிரிய
நிலவரம் கண்டறானும் பலசிலம்
பேசிவரு வீரென்ன இவரை
உலகத்தினி தேவியரும் மதன்மனை
யிடம்பொருந் தியிருக்கின் றோமே. 49

தன்மைசெரி இபுராகிம் தம்சை
அதினுடன் கூடித்தரும். . . .
கனகமணி மாளிகையில் பொருந்தியிருக்
கும்மன்னெ றத்தேச முழுதும்
வான்முழுதும் படைத்த பிரான்யுறைப்
படியே சிரருகில வந்து
கனமுடனே புகழ்ந்துசலாம் உறைத்து
நின்றுசில பரிமானோ துமவனே. 50

முதியநபியே குருவேகொந் தொலமே
சய்யத் குலமுறு சலீமே
மதியமறு மாதிகுல காய்சினதனக்
கீழ்படுத் தியதோர் கெயாகும்
புதியன்உறை த்தான்யித னாலேதனது
பகுமிதி பெறும் பூசலாகும்
அதிகபெரு மைப்படைத் தலைவர்
அவர்களுடன் படையொருவ தரித்தானே. 51

அலியாருக்கு சரமிகுதி தணிந்திடவீரே
புதினவகு மௌவாய் செல்லும்
மெலியார்க்கு காத்துவெய் யில்குளிர்புன
லாகாதென வும்வினை வந்தாலும்
கலியார்க்கும் புவியில்யிவர் குறைத்திட
வேண்டாம் எனவும்கர்த் தாவார்த்தை
அலியாக்கி பெருமிரசூல் வெதாம்
பரொருவ ரிடத்தென்ன ஆளும். 52

பரையுடனே திரியிடும் முலுக்கு
மலுக்குயெ னும்பெயரு டையவேந்
தரைகோ வினைவாடவினி மெல்வி
யறாயி பொறுந் துலகம்
சூரையிட மனமாற்றாமல் ஆடவருமடந்
தையரும்யிருக் கிறதால் வயத்தில்
அரைத்தழு வதேபோல்நா டியவரான்கூவ
பக்கீர்வெளுப்ப மதிதெளிவுற நல்செய்தரா. 53

துலிர்கள் முகமதுசொல் தஞ்சமாய்
மறைக்காயன் வாழ்வு போல்
மெலிந்தவர்க் கெல்லாம் கலியினருள்
தெனும்தரித் தரியம்வடிந் ததெம்பால்
மலிந்திடு மக்காவிநழகு விப்பவசனம்
யெல்லாம் மலர்நெடும் வாரியுபூசி
வலிந்தசெழுக் குறப்பரப்பி பருகுறயழ
அலறிவிடிந் ததுலகம் தானே. 54

வேறு-
இன்னியின் கருனைத்தா நபிகள்
நாயகம்மகிழந் தெவும் கோமான்
துன்னுநன் காதுடைச் சும்பக
டுறான் ஆத்துலை கடந்தே
கென்னையம் புருகி லாவழிது
லக்க தென் தொடுப்ப
வின்னுடன் தாமுமாய் மகரிவிறப்
பதியிலே சென்ற டைந்தார். 55

காடெல்லாம் குஞ்சும் கொடுமா
மலை யெல்லாம் செம்பொன்
யீடெல்லாம் உடையநந்த தெருவெல்
லாம்நிலை விடாநெடிய தோரணங்கள்
வீடெல்லாம் சுடற்களே நாகரத்ன
மணியினா லேமிக விளங்கும்
காடெல்லாம் சந்தன காடுசூழ
வகை யெல்லாம் நெடுகந்தார். 56

நவிலரும் பெருமைசேர் தோரணத்
திறள்களும் மாமருகு தோறும்
துவிளுமாறு வதுமென் சித்திர
கூடங்க ளும்துறை களேறும்
சிவிகையின் திறள்களும் கும்பசிம்
புரிகளும் சென்னி மலைப்பூங்
கவிகையின் திறள்களும் துங்க
சிங்காரமும் கண்டு கந்தார். 57

படர்நிலத் துடையபரப் பில்பரவ
மார்ப்போரு வருவதும்பந்தி பந்தி
இடமிருந்தி டும்காலமெ ல்லாமறப்
பெறுவதும் தெருவு தோறும்
குடசிரிக்கினை பெனம் பூதம்
எதிர்வதும் குவடு போல
கடகரி பந்தியும் தர்கரி
பந்தியும் கண்டு கந்தார். 58

விண்பிளந் திடஉயர்ந்த திடுநெடுங்
கம்மேல் வினையும் பாரம்
மண்யறிந் திடுதல்சிங் காரமும்
வச்சிர மாளிகை யின்வரும்
கண்யறிந் திடும்பதிக் கினிய
சிறழ் கெல்லாம் கண்டு
கண்டே யன்னால் சிங்காசனசெம்
பொன்னின் கொலுவிட தனுகிநீரே. 59

கொடாமல் புரியும் மனதில்
திருமுகமே கொலுவின் மீதே
தூரச்சனங் களும்பரியின் தலை
வரும்சங் கிமாரும் பூதம்
எதிரில் நிழறுயின் திறள்களும்
படைநெரு ங்கசெய் தியும்
பரியுமா மன்னனை கண்
டவன் திருமுன் நின்றார். 60

எய்தியுத் தரசனைசயிது சன்பணிய
வெயிற் வரத்தெரி யாமல்
கைவிரிந் தளவிலே மனமுனிந்து
பையவெண் கண் சிவந்து
செய்தவப் புதியணி யாறெனை
பணிகிலார் செப்பி டென்ன
மெய்தரித் துறையோ நபி
விடுத்து றவனார் புகழுவாரே. 61

விரிதரும் பறவையங் கேதிறளு
ஒருபுறம் விலகியோ டும்பரு
தியங்கே திறளுதொரு புறம்சாயு
மெனபள்ளி மேவும் நிறத்தர்
தரணியறவு கருமே நடுவன்ன
நிலம் மதகாகும் தென்னறில்
வைத்த தினெல்லாம்
விளையும் முரம்மக நாடே. 62

அன்னகாக் குடைய பெரியப
தங்கவுசு தொட்ட ரிசிலேறி
சென்னிறத் தெளி யிறாஒரு
தினந்தா னேசென்று வந்தோர்
மன்னர் கொற்றவர் பிரானிநிய
மெய்த் தூதர்நல் வரிசையின்
நன்னயத் தெரினும் பெரிய
பொழுது மாம்நபி யல்லாவே. 63

உலியது கினியது கினியபெர்நால்
வரும்பொழு தனிலே திகழும்சந்
துலகம் மொழி யும்மெத்தி
டலார்ப் பொரினாலே வலிய
கொற்ற வெரகையி னால்யெல்
லாம்கொ ண்டோர் வின்ன
பெயர் தரித்த வந்தமக்
எதிரியார் அரச ரில்லை. 64

படர்நிலத் தினில்வா பொருந்தட
காத்தோர் மடையு மில்லை
இடர்படுத் துவன்யென் திறையன்
காதப்பெ ரெவரும் இல்லைநெடி
துடர்கிரிமு டித்தழல் விழிபோல
வலாயி கின்னை கெறா
திடர்பல பருத்தவிடம் சிரிதுடன்
பிலபிகுத் துடைய கோமான். 65

அனிமனித் தளவிலே உலகெல்லாம்
கிடுகிடென வேகையு மன்னா
கனையொலிக் கடலெல்லாம் காலினால்
செளெழ கடிதுளக் கருதணி
பின்தனித் தளவிலே மொதும்
அமளவிலே தாவிமீளும் புயலை
காலகனி நெடுந்து வதுலன்
தனிமனித் தளவில் தானே. 66

படியிடங் கிழிவுள் தெருமன்னி
யர்களை பார்க்கண் ணாலே
தொடுவிதம் கொண்டுகடி தூதர்பின்
மறையவே துகளேவிடு மகடுவிதங்
கொடுநடக்கும் மன்னியர் கால்
களாலே கொடிய பொன்
முடிகளைப் பந்த டித்திடு
மேவற் குறைத் தானே. 67

இருண்டிடும் வறபன் எனையாய்
நல்ல வளத்துடைய கோமான்
உருண்ட வருடன் பெறுவர்
ஆரார் காசினிக்கே தும்பியின்
திரளெல்லாம் தகாவெனக் கைக்
கெனச் சொல்வதே கண்டம்
பிரிந்தழ கூடும்சிறு குருவி
லூற்ற அருளு வானே. 68

சிறுவெம்புலி முன்னேயாடு நின்றென்
னெசெய் யும்செய் கைபோல்
விறுக்கின்ற நாமெல் லாம்பே
சினாய் யெனது முன்மெதை
பாறுயிமாறு வென்ற வனலிபுலி
யின்பெருமை யின்வசன மெல்லாம்
கூறுகின்றன யெல்லாம் மதிக
மயலது பின்குறைகள் உண்டோ. 69

உலக மேலவர் புரிந்திடும்
படை பெயரிலே யெருவன்
என்னை உலவி யேமெலி
யமற பெறுவன் முன்
னெங்கோ டுவிடுத் தானலை
இவனன் புடன் அளித்தெனை
உகந்தன யெம்முடன் எனமாசா
பார்த்து நலமுறமை செய்தார். 70

முகம்மதனி ரசூல் முகத்தரசர்
காபினர் வயத் துறை
கருத்தெரிந்தே தான்னுருவ
மேன்கு யரசனே ஒருவரால்
பெரும்படி கொடுத் தவரும்
கத்தவருள மதியென முகத்
தனைவிடுத்தனர் வழக்கினை
யினை தரணி மீதே. 71

வேறு-

இறைவ னருள் மறைவே
  தாமெல்லாம் நபியிரசூல் வசித்த
கூறந்தெயி னவைமா ணங்காப்ப
  தேயென திகழபெண் பிறந்தவோளி
ஊறெங்கெல்லாம் புவிமானங்
  காற்றுபுகழ முகம்மது ஊஞ்சலாடிடு
மறையநபி மானங்காத்தவர் போலஎன்
  னுயிரைக் காத்துமகிழ அனுப்பினாரே. 72

நபியின் தன்னினவறி யாவேந்தன்
  சயிதுசன் சாற்ற கெட்டு
இன்னிலை முதலிரண் டாயிரம்
  வயதுல கமாண் டேன்
என்னல் லாயொருவ ரில்லை
  உலகெலாம் உடைய நானே
என்னி லுமொரு வருண்டோ
  வேழை நீயறி கிலாயே. 73

மெக்கமென் றொருநாடு உண்டோ
  முகமதென் றொருவர் உண்டோ
அக்கனம் உடைய வீரன்
  அளயென ஒருவன் உண்டோ
திக்கெல்லா முடைய வாளாற்
  சொன்ன திருகு வாய்
கக்கவெ போவேன் பையுலகம்
  பாரென் டொருவர் உண்டோ. 74

பூதமும் பரியும் சின்னும்
புயபில் சங்கி மாரும்
மாதியம் பதியினா ளும்மா
விடாவரி யசேனை வொதிய
ஒருவன் தானே உலகமெல்
லாம் யழிப்பனே வில்லெது
மென்றி டுமோ பாரில்
யெவரெண்டுபுகழ ஆவார். 75

குசைதலடி புகழ வேந்தன்செ
வகைவாள் தன்னைச் சத்தே
அசைப் பவரென் தெண்டம்
வணிவிட் டெழுப் புவார்
விசைத்தனு யுடைய என்கை
வில்லினை எடுப்பா ருண்டோ
பெசைந்திடு மெக்கு றான்முன்னே
புறப்பனி எதிரியின் மேல். 76

ஒனிகுல் லென்றுறைவான்
தேவரும் பரியும் சின்னும்
முனிகளும் எடுக்கமாட் டார்முறை
முறைப் போரும் என்ன
நனிதலம் புழுக்கள் போலும்
நால் முழுமான கொஞ்ச
மனிதரோ எதிரி யாவார்
வயப் புலிக்கு எதிரியாரோ. 77

இலைகளை தரித்த வேலால்
இமைக்கு முன்பெரு குவாரிய்
அலைகள் சுவர் வாங்கி
அகமெல் லாம்சிற குகளாக்கி
துலைகளை தரித்த பாதத்
தூணையும் துரும் பாக்கி
மலைகளை பொரும் மென்றோடெ
மனிதரோ எதிரி யாவார். 78

பாறணி பிள்பெ னிடும்பதத்
தையும் அழிப்பே னோங்கும்
தோரண மலைகள் தன்னை
தூளெழுப் பிக்கபே யிவேன்
ஓறணம் புறங் கொடாமல்
போழ்ந்தே ஒன்றினுக்கு நூறு
வாறணம் பெறுமெ ன்னோட
மனிதரோ எதிரி யாவார். 79

எய்திய மதங்கள்பேசி என்னுடன்
எதிர் போர்க் கெல்லாம்
கைகளா யிறகுகள் உண்டோ
கால்களா யிறகுகள் உண்டோ
விழிகளா ளெறிய சத்துமைகளாகிடு
மென்னோடெ மனிதரே எதிரியாவார். 80

பன்னியம் பிறக்கும் நானே
  படையினால் பிளத்தால் விரால்
என்னிலும் யதிக மானோர்
  எனைப் பொருத்டக்க வல்லார்
உன்னில் யெனது வாயால்
  உனக்கு முன்பறந்து போவார்
மன்னிய புழுவங் கொஞ்ச
  மனிதரோ எதிரி யாவார். 81

வலியன் யென்றுறைத் தமக்க
  முகம்மது சபையும் சொன்ன
அலியை யும்பயலை தானும்
  மாறப் பழவகை யேனாசில
நலிவுமென சேனை யென்ன
  புயலெ மென்ன வேந்தன்
சலியட லென்ன வேந்தன்
  சென்ம மென் சென்மம்தானே. 82

இந்தவாறு உறைத்து தனம்பால்
  இருக்கின்ற வேந்தன் தம்மை
நெந்தழல் விழியால் நோக்கி
  செப்புவான் புறவல் லோறை
அந்தமாம் முகம்ம தென்றும்
  அலியெ ன்றும்முகம னென்றும்
பந்தமாய் உறைத் தாரந்த
  பதியென்னா ஆண்மை யென்னா. 83

நறப்பதி இருந்த மக்கம்
நாட்டை யும்சூ றையாடி
முறக் கடைய சேனை
மூவர்கள் தமையும் வெட்டி
தெறப்பா ஆகுமவ்வூர் சிறை
யெல்லாம் பிடித்துக் கொண்டு
வறப்பவாருர் யெவறோ வென்ன
மன்னவன் வெகுண்டு சொன்னான். 84

வேந்தன் கொனுறைத்த போதே
வெம்படைத் தலைவர் எல்லாம்
மெந்தலை அரசரேரே யெமை
யெல்லாம் உடைய கோகோ
வேந்தன் நீயுனக்கு நெய்
தவரோ டெதுக்க வேணும்
மாநதிய புகழ்வான் சின்ன
மனிதரோ எதிரியாவார் மன்னா. 85

நினைக் கிளையான் பெறை
நீபொருந் தடக்க வேணும்
இனைத்துணை மனிதர்க் கெல்லாம்
யாணுமோ ஒருத்தன் பொது
வினைக் களம்பெரு வோமய்யா
விடை யளித்த னுப்பிவா
வெனை தனுக்குடை வெருதை
வெல்ல தானவர் விளம்பினாரே. 86

மாதவம் புரிந்த மக்கமுக
  மதலி அதி ஆதியன்
புடைய பெறை அகமதை
  அடக்க வேண்டி மெதையின்
கரடு போய் சூழ்
  வினை முலுக்கரச னென்றும்
பாதகன் தனைக் கண்டோல்
  பகலவன் குடபால் சேந்தான். 87

நிருபெரும் பருதி போக
  நிழமுல கரசன் மேனி
கருப்பென் னருளவத கிண்டி
  களையிருள் பின்கா டெல்லாம்
மறைத்திட வனங்க ளொடே
  முகமதன் வருவதே போல்
சிறப்பெரு கனங்கள் சூழ
  திங்கள் வந்து எழுந்ததம்மா. 88

வினை முகத்தரசர் கோமான்
  வெடிந்து நிறவருவி ரென்ன
பனையினை கரங்கள் கூப்பும்
  படைகளே அனுப்பித் தானும்
மனையித் தனுகி றானே
  மலைகள் போலிநது மெடை
தனை துயில்வ தானூர்
  தனங்களும் துயில தானார். 89

வாவியோர் தலங்க ளன்றி
வசனங் களமென பொருந்த
தாவியே துணைக ளோடேசன
மெல்லாம் உறங்கும் முன்னேநாம்
பாவியோர் கூட்டம் சேரும்
படை முலுக்கரசர் கோமான்
தேவியோர் கனவு கண்டு
திடுக்க முற்றெழுந்து சொல்வாள். 90

சிறுமெல்ல றகளோரம் வென்னிறத்
தொருவ காதிளயை அபைய
மாவி விலங்குவாள் கரங்கொண்ட
அவ்வூர் மீராவே தழைத்த
ஆலின் நிறத்தைப் போலவே
வருஷ சந்தை வதைக்க
எங்களாற் ஓரிடம் மன்றி
ஆசையும் குறையக் கண்டேன். 91

வனங்களே சனமெல்லாம் நிலவிய
யாவையும் வளர்ந்து மீரும்
சனமெல்லாம் மழிய தாக
தன்னின மாக்கித் தானே
சனமெல்லாம் பெருகக் கண்ட
காரண கனவு தன்னை
வினவியே வினையுறைப்பா யென்ன
வேயித் துயித்தரன் சொல்வான். 92

அமர்கயல் விழியாள் கண்டதால்
ஆகும் பகை கனவிது
நமக்கல்ல நனம்போர் செய்யும்
நன்ன கரகா தென்னு
தமக்குறும் கேடு தன்னை
தானொளித் துறைத்தே நெஞ்சி
லெமத்தி னும்மறந் திடாமல்
அழலிடும் மெழுக்க தானான் 93

காதலி தேவி கண்ட
கனவினா விடைந்து நெஞ்சம்
பேதலித் துருகி நொந்து
பித்தன் போல் பித்ததுவாடி
செதமும் துறந்தோ மென்ற
திருமுடி கவிந்து விம்மி
வெதனை பயனிதெ னவோவில்
லோனா துள்ளவும் ஆனான். 94

புழுவென துடிப்ப நிடுபுத்தை
வையத் தகல நெருய்
தொழுவ நின்றலியை வெல்ல
துணைவறந் தருவர் யென்ப
நெழுவ நொந்தி ருப்பன்தன்
கையிரு நிலதறைந்து சொன்னது
விழுவனைந் தொரு வனொடு
வில்லோனா துள்ளவும் ஆனான். 95

குறவையும் குறையருமாட கோடிக்
கரம் குவிந்து நின்னைப்
பறவையே மேலிந்தா னேன்டெ
பவமெனச் சூட்டு செவல்
லிறவினி வருவா யென்னபிற
கெனும் கரங்களாலே
ஏறவாவென அழைக்க வந்தான்
வந்தான் வான்கதிர் வாயதம்மா. 96

தன்சமே பொதிந்த கெம்புத்
திருந்த தெண்டென் னைநாடி
பின்சமே செரிந்தார் போலும்
பெறும் படைத்தலைவ ரெல்லாம்
கரிசவேல் கனவால் வாடிகாய
மாய்வ தனஞ்சேர்ந் தவர்
அரசர் கோனிடத் தில்வந்தே
கைகள் கூப்பி நின்றார். 97

பொன்னையும் நினையா னாண்ட
புவியையும் நினையான் மேவும்
மின்னையும் நினையான் வினை
வெள்ளமும் நினையான் தந்தை
அன்னையும் நினையான் வெற்றி
அலிகான் வெல்லும் குஷி
தன்னையே நினைவு தென்றி
சஞ்சலம் மிகுதியா னான். 98

இலத்தையும் நோக்கான் வாழும்
இனத்தை யும்நோக் கான்கல்வி
நலத்தையும் நோக்கான் போற்றும்
நாவலர் தனையும் நோக்கான்
பிலத்தையும் திருந்து வாழும்
பெரியவர் நபியே யென்றி
நிலத்தையே நோக்கி வாடிநெடி
துயித் திருந்த சேர்ந்தான். 99

சினப்படை மறுத்து வந்து
திருமுகம் கண்டு போற்றி
மனப்பொருள் புரிந்துவாழ்
வகையறியாமல் அன்றி
கனப்பொருள்புரியும் கையான்
கன்னகுஞ் சாலி ராயன்
தனப்பகை கொண்டாற் போல
சஞ்சலம் மிகுதியானான். 100

கருத்துபோல் கொண்டாற் போல்
கதை கரத்தால் தாங்கி
இருந்தவன் தன்னை கண்டே
எய்திய தலைவர் எல்லாம்
பெரும் தவமுடைய கோவே
பேதலித் துருகி வாடி
வருந்திய வகையே தென்ன
மன்னவன் உறைப்பதானான். 101

எனையல்ல அரசரும் இல்லை
என்றிருந் தேன் மிக்க
மனைகள் சொமக்கம் என்று
முகம்மதன் னொருவ னென்றும்
அனேகம் போர் வென்றவீரன்
அலியென் றும்கம் பனென்றும்
வினையின் மேல்நினைவெ அல்லால்
வேறொரு சலிப்பும் உண்டோ. 102

பலர்தம்மை பிறந்த மக்கபதி
யெல்லாம் சூறை யாடி
சிலைனுதல் குழுந்த வாயின்
சிறை யெல்லாம் பிடித்து
கொண்டுமலை நிகரனையகொனரா
முகமதை அலியை வெட்டி
தலைகள் கொண்டு வந்தால்
சலிப்பொன்றும் இல்லை என்றான். 103

அருள்தரும் குடையான் செத்தி
அடல்முலுக் கரசன் சொல்வ
போர்க் களம் தலைவர்
சொல்ல பொறுமினே நமாத்
திமிறாயி கால்த்தடம் கரிய
பூதம் கனங்களுக்கு கமான்
பார்த்திட்ட ஒருவன் னூது
பதிலால் உனைத்தான்சொல்வான். 104

இந்திர னுடைய கோவெ
இனத்தை யொரு பாரமாக
மனந்தனில் நினைப்ப தெல்லாம்
மன்னவர்க் கழகோ மன்னா
முன்னிருந்த நின்பகை ஞ்சரான
முதல்வரை அடக்க வாகை
புனை புனையிற் னானை
பொதுவாக சலிக்க வேண்டாம். 105

அலைகளை அடிப்ப நோக்கி
அண்டம டொயர்ந்த கோட்டை
மலைகளை யிடிப்பேன் சூழ்ந்த
மதக்கரி யினத்தை கொல்வேன்
நிலைகளை பிறந்த மக்கம்
நெடும்பதி தனையும் மாந்தர்
இலையெனை பெறுவான் போரில்
எனைவிட் டனுப்பு வாயே. 106

கொக்கினை திறளை நாடி
குறித்த வல்லூறு போலாயம்
மக்கந ந்தகரி லேகி
முகம்மது தனையும் கொன்று
மிக்கபோ ரலியை வெட்டி
மென்சிறை திறளு கொண்ட
இக்கனம் வருவேன் போரில்
எனைவிட் டனுப்பு வாயே. 107

வாசகம் மொழியைக் கேட்டு
மனமகிழ்த் அரசன் சொல்வான்
நேசமாய் மதன்ன யெழும்
நிருபனை செய்த தாலே
எந்தன் தேசமா மதனில்பாதி
முடன்திறமுடன் தருவேன்
பூதரசனே சொல்வா யென்ன
நவிலுவான் கொடிய பூதம். 108

அந்தமா மவிலி வேந்தே
அயலுள்ளாற் குறைத் தவராய்
இந்தவா றுறைக்க வேண்டாம்
எனக்கு நீதருவ தெல்லாம்
பந்தமாய் இருந்த மக்க
பதியழி அலியை வெட்டி
வந்தபோ துறைப்பே னென்ன
மன்னவன் மகிழ்வ தானான். 109

எனக்கலா முடைய னாயன்
என்றுதைத் தனைய தேசம்
தனக்கெலா முடைய நீயே
சந்ததி தனிலும் மனம்பாய்
மனக்கவா டிடறியா உந்தன்
மனையிடம் புகுந் துவா
வென்றனுப் பினான் கொடி
பூதமுக மதிர்போற் றுதம்மா. 110

அமானுல்லா கதை முற்றிற்று

xxxxxxxx

T.7214